Registered as a Newspaper பக்கங்கள்: 12

விலை ரூபா 5·00

ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி · PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஐப்பசி 25 | 11-11-94 | வெள்ளிக்கிழமை | ஓசை 266

### 16வயதை அடைந்த மாணவருக்கு அடையாள அட்டைபெற பணிப்பு

பதினாறு வயதினை அடைந்துள்ள பாடசாலை மாணவர்களுக்கு தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக் கொடுக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு யாழ் கல்வி வலயம் 1பணிப்பாளர் செல்வி பெரியதம்பி பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். மேற்படி வயதினை அடைந்துள்ள மாணவர்கள் க. பொ. த (சா-த] மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கு தோற்றுவதற்கு தேசிய அடையாள அட்டை அவசியமாக இருப்பதால் இவற்றை மாணவர்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்வதற்காகவே(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதித் தேர்தலில் பிரதமர் சந்திரிகா

# 20லட். மேலதிக வாக்குகளால் பெருவெற்றி

## 62 வீதமான வாக்காளரால் தெரிவு



(கொழும்பு)

சிறிலங்கா ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளரும் பிரதம மந்திரியுமான சந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்கா அமோக வெற்றிபெற்றுள்ளார். இவர்வாக்களிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 62 வீதத்திற்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்று தமது வெற்றியை நிலைநாட்டிக் கொண்டுள்ளார். இவர் சுமார் இருபது இலட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ளார்'

தேர்தல் முடிவுகளின்படி பொதுஜன ஐக்கிய முன்னணி வேட்பாளர் சந்திரிகா குமாரதுங்கா 47 லட்சத்து 9 ஆயிரத்து 205 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா 27 லட்சத்து 15ஆயிரத்து 283 வாக்குகளையும் பெற்றுள்ளனர்,

இதனடிப்படையில் தன்னுடன் போட்டியிட்ட சிறிமா திசாநாயக்காவைவிட சுமார் 20 இலட்சம் மேலதிக வாக்குகளைப் பெற்றுள்ளதுடன் ஜனாதிபதியாகத் தெரிவாவதற்கு தேவையான வாக்குகளுக்கு மேலதிகமாக ஒன்பது லட்சத்து 28 ஆயிரத்து 442 வாக்குகளையும் பெற்றுள்ளார்.

தேர்தல் நடைபெற்ற சகல மாவட்டங்களிலும் பிரதமமந்திரி சந்திரிகா அமோகமான வெற்றியைப் பெற்றுள்ளார்.

நடந்து முடிந்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சி வரலாறு காணாத படு தோல்வியை சந்தித்துள்ளது. நாடு பூராவுமான 196 தேர்தல் தொகுதிகளில் மகியங்கனை தேர்தல் தொகுதியில் மட்டுமே ஐ. தே. க. வெற்றி பெற்றுள்ளது.

### ஜனாதிபதி தேர்தல் முடிவு - 1994

| வேட்பாளர்கள் | வாக்குகள் | சதவீதம் |
|---|---|---|
| ★ சந்திரிகா குமாரதுங்கா | 47,09,205 | 62.28 |
| ★ சிறிமா திசாநாயக்கா | 27.15,283 | 35.91 |
| ★ ஹட்சன் சமரசிங்க | 58 886 | 0.78 |
| ★ ஹரிச்சந்திர விஜேதுங்க | 32 651 | 0 43 |
| ★ ஏ. ஜே. ரணசிங்க | 22 002 | 0.29 |
| ★ நிஹால் கலப்பதி | 22,749 | 0 31 |
| மொத்த வாக்குகள் | 75,61,526 | 100.00 |

## சமாதானப் பேச்சுக்கள் குறித்து இன்னமும் திகதி நிர்ணயம் இல்லை

### தர்மசிறி சேனநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி ஆட்சி அதிகாரத்தை முழுமையாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர் சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் தொடங்கும் என தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்-

நேற்றிரவு பி பி ஸியின் சிங்கள சேவையில் இடம்பெற்ற செய்மதி தொடர்பு மூலமான கலந்துரையாடலின் போது அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்-

சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து திகதி இன்னமும் நிர்ணயம் செய்யப்படவில்லை. ஆனால் பேச்சுவார்த்தை தொடர்ந்து நடைபெறவேண்டும் சமாதானத்தை ஏற்படுத்த அதுவே வழி-

திருமதி சந்திரிகா குமாரதுங்கா பதவி பிரமாணம் செய்து மந்திரிசபை சத்தியப் பிரமாணம் செய்த கொண்ட பின்னர் பேச்சுவார்த்தை தொடங்கப்படும்.

இந்த வெற்றி இலங்கையின் இனவாத சகதிக்கு ஏற்பட்ட தோல்வி என அமைச்சர் மேலும் கூறினார்-

## அரசு எடுக்கும் சமாதான முயற்சிக்கு மக்கள் அளித்தஒப்புதலேஎமதுவெற்றி

### தேர்தல் முடிவு அறிவிக்கப்பட்ட பின் சந்திரிகா உரை

(கொழும்பு)

'அரசு முன்னெடுக்கும் சமாதான முயற்சிகளுக்கு மக்கள் அளித்துள்ள ஒப்புதலே இத் தேர்தல் முடிவுகள் ஆகும்' இவ்வாறு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க கூறியுள்ளார்-

அவர் மேலும் கூறுகையில் எனினும் எவ்வகையிலும் சமாதானம் செய்து கொள்வது என்பது தமது கொள்கையல்ல எனவும் எச்சரித்தார்-

சமாதான முயற்சிக்கு எதிராக தீவிரமான, கீழ்த்தரமான, அபாயகரமான இனக்குரோதத்தை ஊட்டும் பிரசாரம் ஒன்றை எதிர்க்கட்சிகள் மேற்கொண்டு வந்தன- இதற்கு மத்தியிலும் சமாதானம் குறித்த தெளிவான ஆணையை மக்கள் எமக்கு தந்துள்ளனர்-

சிங்கள மக்கள் அனுபவிக்கும் உரிமைகள் சிறுபான்மையினரும் அனுபவிக்க ஏற்ற வழிமுறைகளை நான் மேற்கொள்வேன் என இச்சந்தர்ப்பத்தில் நான் கூற விரும்புகிறேன். இச்சமயத்தில் பெரும்பான்மை சிங்கள மக்களின் நலன்களும் தொடர்ந்து பாதுகாக்கப்படும் என உறுதி கூறுகிறேன் என பிரதமர் சந்திரிகா குமாரதுங்க நேற்று (12 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகாவின் பதவியேற்பு நாளையே நடைபெறும்

(கொழும்பு)

திருமதி சந்திரிகா பண்டாரநாயக்காகுமாரதுங்க ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும்வைபவம் திட்டமிட்டபடி இன்று நடைபெறாது எனவும் அது நாளையே நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது-

இவ்வாறு இப் பதவியேற்பு வைபவம்தள்ளி வைக்கப்பட்டுள்ளமைக்கு சோதிட ரீதியான விடயங்களே காரணம் எனவும் கூறப்படுகிறது-

## அடுத்த பிரதமர் பற்றி இன்னும் முடிவு இல்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் அடுத்த பிரதமராக யாரை நியமிப்பது என்பது குறித்து இன்னமும் முடிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார்-

இது குறித்துஇன்னும்இரண்டொரு தினங்களில் முடிவு எடுக்கப்படும் என மேலும் அவர் கூறினார்-

மேலும் சிறு சிறு வன்செயல்கள் ஆங்காங்கே நடைபெற்றதை மறைக்க நாம் விரும்பவில்லை ஆனால் எமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் ஒரு சுதந்திரமான தேர்தலே நடந்துள்ளது-

75 சத வீதமான மக்கள் வாக்களிப்பில் கலந்துகொண்டுள்ளனர்- இதுவே சாதாரண நிலையில் தேர்தல் நடைபெற்றிருப்பதை ஊர்ஜிதப்படுத்து (12ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### கப்டன் அருளரசன் (றொபின்)

யாழ்மாவட்டத்தில் நேற்று சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச் சாவடைந்தார்

வீரச்சாவடைந்த கப்டன் அருளரசன்/றொபின் (மல்லி மனோகரன் சின்னத்தோட்டம், பருத்தித்துறை) எனும் போராளிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்

## படகுச்சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவைஇன்றுவழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

### வெள்ளி மஞ்சரி வெளிவரவில்லை

தவிர்க்க முடியாத காரணத்தினால் இன்று வெள்ளி மஞ்சரி வெளிவரவில்லை என்பதனை வாசகர்களுக்கு வருத்தத்துடன்தெரிவித்துக்கொள்கிறோம்

## கடற்கரும்புலி மேஜர் வித்தி இன்று வித்துடல் விதைப்பு

கடந்த எட்டாம் திகதி சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள வெற்றிலைக்கேணிக் கரையோரத்தில் சிறிலங்கா கடற்படைக்குச் சொந்தமான ''லாண்டிங் கிறாப்ற்'' என்னும் படைகள் தரையிறக்கும் போர்க்கப்பல் மேல் மேற்கொண்ட கரும்புலித் தாக்குதலில் கப்பலைப் பாரிய சேதத்திற்குள்ளாக்கி வீரச்சாவைத் தழுவிக் கொண்ட கடற்கரும்புலி மேஜர் வித்தியின் (சந்தனம் யோகேஸ்வரன், மாதா கோவிலடி, துன்னாலை வீர வித்துடல் கிடைக்கப்பெற்றுள்ளது

அம் மாவீரரின் வித்துடல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## சீரற்ற காலநிலையால் வள்ளம் நீரில் மூழ்கியது

### இரு மீனவரை காணவில்லை

(குருநகர்)

சீரற்ற காலநிலை காரணமாக மண்டை தீவுக்கு அப்பால் மீன்பிடிக்கச் சென்ற வள்ளங்களில் ஒன்று நேற்றுக் கரை திரும்பவில்லை என அறிவிக்கப்படுகிறது.

மற்றொரு வள்ளம் கடலில் மூழ்கியதாகவும் அதனில் சென்ற மூவரில் ஒருவர் நீந்திக் கரைவந்ததாகவும் மற்றிருவர் நீந்தி வந்தபோதும் நேற்றுமாலை இச்செய்தி எழுதப்படும்வரை கரை வந்து சேரவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குருநகர் றெக்ளமேசன் புதிய கடற்கரை வீதியைச் சேர்ந்த செல்வம் நியூட்டன் (12ஆம் பக்கம் பார்க்க)

## ராணுவ தலைமை, கட்டமைப்பிலும் விரைவில் பாரிய மாற்றம் வரலாம்

(கொழும்பு)

பாதுகாப்பு படைகளின் கட்டமைப்பில் மிக விரைவில் பாரிய மாற்றங்கள் கொண்டு வரப்படலாம் எனவும் ஜனாதிபதி தேர்தல் முடிவுக்கு வந்துள்ளதையடுத்து பாதுகாப்பு படைகளில் குறிப்பாக இராணுவத் துறையில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது எனவும் இராணுவத் தளபதி பதவி உட்பட உயர்பதவிகள் பலவும் மாற்றத்திற்கு உள்ளாகலாம் எனவும் கூறப்படுகிறது'

விடுதலைப் புலிகளுடனான சமாதானப்பேச்சுக்கள் தோல்வியுறும் பட்சத்தில் அரசாங்கம் பெரும் எடுப்பிலான யுத்தம் ஒன்றை நடத்த நிர்ப்பந்திக்கப்படலாம் எனவும் அதற்கேற்ற வகையிலேயே இராணுவ அமைப்பில் மாற்றம் கொண்டுவர ஆலோசிக்கப்படுவதாகவும் இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர்

அனுபவம் வாய்ந்தவர்களும் போர் முனைகளில் பணியாற்றியவர்களுமான அதிகாரிகள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்பட வேண்டுமெனவும் அத்தகையவர்களே இராணுவத் தளபதியாக நியமனம் பெற வேண்டுமெனவும் அவர்கள் சிபாரிசு செய்துள்ளனர்

## வன்செயலற்ற தேர்தல் நடந்திருப்பின் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பேன்

### ஐ: தே. க. வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தல் வன்முறைகளற்றுசுமுகமான சூழலில் நடந்திருந்தால் நான் நிச்சயம் வெற்றி பெற்றிருப்பேன் என ஐக்கியதேசியகட்சி ஜனாதிபதி வேட்பாளர் சிறிமா திசாநாயக்கா தெரிவித்தார்.

கொழும்பில் அவரது இல்லத்தில் வைத்து பி. பி. ஸி செய்தியாளர் எல் மோ பெர்னாண்டோவிற்கு அவர் அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்வியை ஒப்புக் கொள்ளும் அதேவேளை தேர்தல் நடைபெற்ற முறையையும் அதில் இடம்பெற்ற குளறுபடிகளையும் எம்மால் ஏற்றுக் (12ஆம் பக்கம் பார்க்க)

# 5 அம்சகோரிக்கைகளை முன்வைத்து தீவக நலன் காக்கும் கழகம் மகஜர்

## பிரதமர் சந்திரிகாவிற்கு அனுப்பியது

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவக மக்களின் இன்னல்களை போக்கும் வகையில் தீவக இடம்பெயர்ந்தோர் நலன் காக்கும் கழகத்தினர் புதிய ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு ஐந்து கோரிக்கைகளை நேற்று யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபர் ஊடாக அனுப்பி வைத்துள்ளனர்

★ இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணத்திற்குப் பதிலாக தற்போது நடைமுறைப் படுத்தப்படவுள்ள பணக் கொடுப்பனவை நிறுத்தி ஏற்கலவே நடைமுறையில் இருந்து வரும் இலவச உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுதல்

★ உலர் உணவு பொருள் விநியோகத்தை சீரான ஒழுங்கில் மேற்கொள்ளும் வகையில் பொருட்களைத் தாமதமின்றிகப்பல் மூலம் அனுப்பி வைக்க தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளுதல்

★ ஏற்கனவே வழங்கப்பட்டு தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள இடம்பெயர்ந்த பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரையை அரச, கூட்டுறவு, கூட்டுத்தாபன ஓய்வூதியம் பெறும் குடும்ப மாணவர்கள் உட்பட சகல மாணவர்களுக்கும் மதிய உணவு முத்திரை கிடைக்க வழி செய்தல்

★ இடம்பெயர்ந்த சகல அரச, கூட்டுறவு, கூட்டுத்தாபன, ஓய்வூதியர்களின் குடும்பங்களுக்கும் இலவச உலர் உணவு நிவாரணத்தை வழங்குதல்

★ வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் மக்களுக்குஇலவசமாக மண்ணெண்ணெய் முத்திரை வழங்கப்படுவது போன்று இடம்பெயர்ந்துள்ள சகல மக்களுக்கும் மண்ணெண்ணெய் முத்திரை வழங்கல் போன்றவற்றை நிறைவேற்றித் தருமாறு கழகத்தினால் கோரப்பட்டுள்ளது

இடம்பெயர்ந்துள்ள மக்கள் வாழ்வதற்கு அடிப்படைத் தேவைகளாகிய வதிவிடம், சுகாதாரம், உணவு, மருத்துவம், கல்வி, போக்குவரத்து போன்றவற்றை பூர்த்தி செய்யமுடியாத நிலையில் இன்னல் படுகின்றனர். இவற்றிற்கு மேலாக நாளாந்தவாழ்க்கைச் செலவுகளை ஈடுசெய்யும் தொழில் வாய்ப்புக்கள் அனைத்தையும் இழந்துள்ளார்கள் இவைகளின் காரணமாக சிறு குழந்தைகள்: கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், வயோதிபர்கள் ஆகியோர் போசாக்கின்மையால் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்

இவற்றில் இருந்து நாம் விடுபட எமது கோரிக்கைகளை நிறைவேற்றித்தருமாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

புனர்வாழ்வு புனரமைப்பு கப்பல்துறை அமைச்சு சுகாதாரசமூகநலத்துறைஅமைச்சு யாழ்மாவட்ட அரச அதிபர் ஆகியோரிற்கும் இதன் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது

இவற்றை நேற்று கழகத்தின் தலைவர் வ. ஐயாத்துரை, செயலாளர் ச. குணசீலன் ஆகியோர் யாழ் மாவட்ட மேலதிக அரச அதிபரிடம் நேரில் சென்று கையளித்துள்ளனர் (இ

## சந்திரிகாவின் பிரசார ஒளிபரப்பில் முறைகேடு

(கொழும்பு)

ரூபவாகினியில் ஒளிபரப்பப்பட்ட பிரதமரின் தேர்தல் பிரசார உரை செய்திக்கென ஒதுக்கப்பட்டநேரத்தில் எட்டு நிமிடங்களை விழுங்க அனுமதிக்கப்பட்டது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் இவ்வாறு தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க சுதந்திரக் கட்சி தலைமை அலுவலகத்தில் நடாத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

பிரதமர் சந்திரிகா கேகாலையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஆற்றிய உரை கடந்த சனிக்கிழமையன்று செய்தி நேரத்தில் எட்டு நிமிடம் நீடிக்க அனுமதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது; இதனைச் சரிபசன நடவடிக்கை அல்ல எனக் குறிப்பிட்ட தர்மசிறி சேனநாயக்க பிரதமரின் உரையிலைப் போல அமைந்து ஆர்வமூட்டுவதாக இருந்திருந்தால் அவ்வாறு நிகழ்ந்திருக்கக் கூடும் இதுபற்றிக் கருத்துக்கூற விரும்பவில்லை எனவும் குறிப்பிட்டார்,

## உதைபந்தாட்டம் ஒத்திவைப்பு

யாழ் மாவட்டப் பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தும்உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகளில் இன்று நடைபெறவிருந்த போட்டிகள் மட்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது


### வரி விளம்பரம்

**தவறிவிட்டது**

நாவாந்துறை சென் நீக்கிலஸ் கோயில் ஒழுங்கையில் ஞாயிற்றுக்கிழமை (6-11-94) பி. ப. சிங்கப்பூர் சங்கிலி ஒன்று தவறிவிட்டது: அதனை கண்டெடுத்தவர்கள் எவ்விடத்திலிருப்பினும் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கும் வண்ணம் இரந்து கேட்டுக் கொள்ளப்படுகின்றனர், தயவுசெய்து ஒப்படைக்கவும் ஒப்படைக்கப்படுபவர்களுக்கு சிறு தொகை அன்பளிப்பு செய்யப்படும் (10057)

**இன்று (11. 11. 94) வியாழ மாற்றம்**

திருக்கணித பஞ்சாங்கப்படி இன்று வெள்ளிக்கிழமை பகல் 12. 17க்கு (11. 11. 94) வியாழன் விருச்சிகராசிக்கு மாறுகின்றது. வியாழ மாற்றம் ரூபா 10/- எங்கும் கிடைக்கும்; சோபிதா புத்தகசாலை யாழ்ப்பாணம். நாலாசிரியர்-சந்யா கட்டுடை (10032)

**சேவை**

மூன்று மொழிகளில் மூன்று நாட்களில் றப்பர் ஸ்ராம்ஸ், டேற் ஸ்ராம்ஸ், பிளாஸ்டிக் நேம் போட்ஸ், பிளாஸ்டிக் நம்பர் பிளேட், விளம்பர போட் யாவும்செய்து கொள்ள வீமா றப்பர் ஸ்ராம்ஸ் 234, நாவலர் வீதி. (கிறகு காலை முன்பாக) ஆனைப்பந்தி சந்தி; (10030)

**"நீமியா உரம்"**

நெற்பயிர் மற்றும் விவசாய பயிர்களில் பூச்சிகளின் தாக்கத்தை இல்லாமல் ஒழித்துப் பாதுகாக்கும் இயற்கை உரம் 'நீமியா உரம்', பாவித்துப் பயன் பெறுங்கள். கைதடியில் கிறைண்டிங் மில் ஸ்தாபனத்திலும் விற்பனைக்குள்ளது. 'மீலக்கைவற்' (சி-10688)

**சோதிடம்**

விற்பனையாகிறது விண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் யோக பலன்? விரைவில் 1995ம் ஆண்டு உங்களுக்கு எப்படி?சோதிடர் V. A. சிவராசா [வேலணை) 152 B அரசடி வீதி கந்தர் மடம். (10057)

**பாலர் ஆசிரியராக சந்தர்ப்பம்**


பயிற்சியில் சேரசந்தர்ப்பம் கடைசித் தகைமை க-பொ-த (சா/தா) சனி, ஞாயிறு கற்க முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம் -பாலர்ஆசிரியர் சங்கம் மே/பா உயர் கலைக்கல்லூரி ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்; (9998)


## ஓராண்டு நிறைவு விழா

(வட மராட்சி)

வடமராட்சிக் கல்விக் கோட்ட கணித மூலவள நிலையத்தினரின், ஓராண்டு நிறைவு விழா இன்று பி.ப 2 மணிக்கு சரணவாய் பொன்னம்பல வித்தியாலயத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதன்மை விருந்தினராக வலயம் இரண்டு கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமி, தமிழீழக் கல்விப் பொறுப்பாளர் வெ. இளங்குமரன் ஆகியோர் கலந்து கொள்வர். (யோ)


### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**லெப். கேணல் சூட்**

முன்னாள் புன்னாலைக் கட்டுவன் பிரதேசப் பொறுப்பாளரும், யாழ். மாவட்ட புலனாய்வுப் பிரிவு பொறுப்பாளருமாகிய லெப். கேணல் சூட் உட்பட 11-11-1993 அன்று பூநகரி நாகதேவன் துறையில் நடைபெற்ற வெற்றிகரத் தாக்குதல் ஒப்ரேசன் தவளையில் இவருடன் வீரச்சாவு எய்திய சக மாவீரர்களுக்கும் எமது அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்;

புன்னாலைக் கட்டுவன் வாழ் மக்கள்

(10059)

### 1ம் ஆண்டு நினைவு



தாயின் மடியில் 28-12-1969

தாயக மண்ணில் 11-11-1993

**லெப். மோகன் /எழிலரசன்**
**(சின்னத்தம்பி சந்திரசேகரம்)**

பூநகரி யிலோர் பூகம்ப மேடை
பூமி அதிர்ந்திட புவியும் வியந்திட
நாக தேவன்துறை வீழ்ந்திட
நாடி ஒடுங்கியே நாலு திசையிலும்
வேகமாக ஓடி மறைந்தான், எதிரி
வெற்றியாவையும் இழந்தான்
தாகம் தமிழீழ மண்ணின் விடிவுக்காய்
தனதுயி ரீகம் செய்தான் மோகன்.

கரணவாய் தெற்கு,
கரவெட்டி. - குடும்பத்தினர்

(9753)

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**2-ம் லெப். செந்தமிழ்ச்செல்வன்**
**(கந்தையா கேதீஸ்வரன்)**

பிறப்பு: 28-06-1969
வீரச்சாவு 11 11-1993

அன்னைக்கு முத்தாய்
அவதரித்த அவள் மகிழ
மண் மீட்கும் போரினிலே
வேங்கையாய் பூநகர் மண்ணிற்கு
வித்தாய் ஆனவனே - உன்
கனவு கண்ணீரில் கரையாது
செந்நீரில் வெற்றி பெறும்.

22/2, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்- 

தந்தை, தாய்
சகோதரர்கள்

(10061)

### ஓராண்டு நினைவலைகள்



மண்டானில் 25-5-76

பூநகரியில் 11-11-93

**வீரவேங்கை இன்பன்**
**இராசரத்தினம் அகிலன் (கிருபா)**

பூநகரி மண்மீட்கப் புறப்பட்ட பூவே
புவிதன்னில் வாழும்வரை நெஞ்சில்
உனைப் போற்றிடுவோம்!

மண்டான்,
சரணவாய் மேற்கு:
11-11-1994 - குடும்பத்தினர்

(10060)

### ஒப்புநோக்குநனர் தேவை

(தமிழ், ஆங்கிலம் )

அச்சுப்பதிப்பில் முன்னணியில் திகழும் இராசன் அச்சகத்திற்கு தமிழ், ஆங்கிலம் இரு மொழிகளிலும் ஒப்பு நோக்குனர் தேவைப்படுகின்றனர். தகைமையுடையவர்கள் தகைமைச் சான்றிதழ்களுடன் 14 - 11 - 1994 அன்று கீழ்க்காணும் முகவரியில் எமது நிறுவனத்தில் நடைபெறவுள்ள நேர்முகத் தேர்வுக்கு சமுகமளிக்கவும்

**இராசன் அச்சகம்**
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

குறிப்பு
ஆங்கிலம், தமிழ் மொழிகளில் ஒப்புநோக்கக் கூடிய ஆண்கள் எவரும் சமுகமளிக்கலாம்;

(10052)

### 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**2ஆம் லெப். யசோகணேஸ்**
**(மணியம சிவகணேசமூர்த்தி)**

தலைவன்காட்டும் வழியிலுந்தன் தலைநிமிர்த்தினாய்
தமிழர் தேசம் விடியவென்று படைநடத்தினாய்
புலரும்நேரம் புதியதான பரணி எழுதினாய்
பூநகரி எதிரிவீட்டைத் தீயில் மூட்டினாய்
நிலையிலென்றும் உறுதியோடு நிமிர்ந்து நின்றவா
நின்றுனது அண்ணன்விட்ட பணிமுடித்தவா
விலையிலாத உயிரைத்தூக்கி வீசி விட்டவா
வீரனேயுன் நினைவு நாளில் பாடல் எட்டுதா?
உன் ஒரு வருட நினைவுடன் தொடரும் எம்பணிகள்

காக்கையன்குளம்,
வவுனியா.

பெற்றோர்,
சகோதரர்

(10058)


## மாவட்டம்: களுத்துறை

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| பாணந்துறை | 42951 | 20032 | 161 | 340 | 166 | 198 |
| பண்டாரகம | 40503 | 23555 | 107 | 263 | 315 | 187 |
| ஹொரண | 36064 | 21886 | 147 | 262 | 351 | 212 |
| புளத்சிங்கல | 27072 | 20094 | 145 | 172 | 281 | 131 |
| பேருவளை | 36364 | 23487 | 153 | 115 | 246 | 135 |
| மத்துகம | 33726 | 20667 | 201 | 202 | 286 | 168 |
| களுத்துறை | 37490 | 22209 | 161 | 226 | 237 | 170 |
| கலவத்தை | 32467 | 21903 | 201 | 190 | 322 | 163 |

## மாவட்டம் காலி

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| ரத்கம | 28618 | 17406 | 156 | 138 | 164 | 81 |
| பலப்பிட்டிய | 1 307 | 12087 | 70 | 59 | 108 | 83 |
| பெந்தரஎல்பிட்டிய | 32213 | 18747 | 132 | 160 | 224 | 124 |
| அக்மீமன | 29135 | 17697 | 128 | 190 | 111 | 117 |
| காலி | 23587 | 17257 | 98 | 185 | 83 | 127 |
| பத்தேகம | 33932 | 20785 | 185 | 174 | 272 | 131 |
| ஹினிதும | 34003 | 23216 | 208 | 157 | 282 | 172 |
| கரந்தெனிய | 22470 | 11904 | 163 | 126 | 244 | 81 |
| அம்பாலங்கொட | 25258 | 17406 | 116 | 140 | 163 | 101 |

# ஜனாதிபதித் தேர்தல் முடிவு '94 (தொகுதி வாரியானவை)

## மாவட்டம் கண்டி

| தேர்தல் தொகுதி | பொ.ஐ.மு. சந்திரிகா | ஐ.தே.க. சிறிமா | மு.போ.மு. நிஹால் | பூமிபுத்ர ஹரிச்சந்திர | சுயேட்சை ஹட்சன் | சுயேட்சை ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| கண்டி | 12339 | 10477 | 41 | 258 | 98 | 78 |
| கலகெதர | 17288 | 14862 | 61 | 118 | 201 | 59 |
| உடுதும்பறை | 22944 | 11906 | 126 | 86 | 277 | 96 |
| தெல்தெனிய | 14309 | 10742 | 85 | 92 | 238 | 90 |
| குண்டசாலை | 24150 | 18243 | 102 | 238 | 285 | 122 |
| ஹேவாஹெட்ட | 19303 | 18076 | 74 | 107 | 318 | 119 |
| உடுநுவர | 24199 | 17442 | 101 | 215 | 287 | 155 |
| கம்பளை | 29558 | 19592 | 105 | 193 | 350 | 169 |
| ஹரிஸ்பத்துவ | 48134 | 33007 | 219 | 303 | 582 | 228 |
| பாததும்புற | 23082 | 199995 | 109 | 175 | 348 | 167 |
| செங்கடகல | 22323 | 17152 | 62 | 335 | 172 | 123 |
| யட்டிநுவர | 25099 | 17621 | 130 | 220 | 226 | 103 |
| நாவலப்பிட்டிய | 26785 | 19423 | 119 | 176 | 344 | 169 |

## மாவட்டம் பொலநறுவ

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| மின்னேரிய | 25779 | 15079 | 169 | 134 | 279 | 64 |
| மெதிரிகிரிய | 23977 | 17587 | 111 | 112 | 313 | 67 |
| பொலன்னறுவை | 36865 | 25284 | 173 | 169 | 528 | 118 |

## மாவட்டம் மாத்தளை

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| தம்புள்ளை | 37869 | 23746 | 229 | 273 | 602 | 187 |
| லக்கல | 26092 | 13013 | 143 | 137 | 507 | 119 |
| மாத்தளை | 25234 | 16006 | 137 | 289 | 379 | 126 |
| இரத்தோட்டை | 28300 | 18187 | 154 | 250 | 618 | 169 |

## மாவட்டம் மொனராகல

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| பிபிலை | 24271 | 13867 | 246 | 209 | 674 | 200 |
| வெல்லவாய | 38050 | 21090 | 295 | 414 | 600 | 174 |
| மொனராகல | 31950 | 15801 | 261 | 234 | 687 | 175 |

## மாவட்டம் - குருணாகல

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| படுகஸ் நுவர | 23158 | 15432 | 109 | 114 | 234 | 103 |
| கிரியல்ல | 28159 | 20880 | 148 | 178 | 405 | 131 |
| தொடகஸ்லாந்த | 20241 | 14374 | 171 | 142 | 322 | 100 |
| குருநாகல | 24685 | 17005 | 91 | 158 | 188 | 151 |
| குளியாபிட்டிய | 29438 | 22996 | 107 | 167 | 295 | 149 |
| கட்டுகம்பொல | 63528 | 19095 | 101 | 152 | 224 | 114 |
| வாரியபொல | 25612 | 16862 | 102 | 118 | 231 | 87 |
| நிக்கவரெட்டிய | 30415 | 17932 | 164 | 145 | 294 | 117 |
| தம்பதெனிய | 30716 | 20613 | 112 | 170 | 244 | 151 |
| மாவத்தகம | 28057 | 16635 | 135 | 177 | 348 | 124 |
| கல்கமுவ | 22942 | 16086 | 104 | 132 | 307 | 98 |
| யாப்பகுவா | 33582 | 20613 | 111 | 170 | 367 | 118 |
| பிங்கிரிய | 27377 | 19915 | 105 | 109 | 233 | 103 |
| பொல்காவலை | 23447 | 17030 | 96 | 165 | 216 | 108 |

## மாவட்டம் புத்தளம்

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| நாத்தாண்டிய | 27856 | 16721 | 70 | 81 | 180 | 86 |
| புத்தளம் | 29040 | 15542 | 118 | 75 | 531 | 122 |
| வென்னப்புவ | 33874 | 210'4 | 102 | 134 | 228 | 121 |
| ஆனமடுவ | 35977 | 17821 | 191 | 176 | 475 | 122 |
| சிலாபம் | 35415 | 22240 | 130 | 133 | 382 | 121 |

## மாவட்டம் மாத்தறை

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந் ர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| கம்புறுப்பிட்டிய | 31038 | 14133 | 167 | 213 | 305 | 128 |
| ஹக்மன | 29756 | 11473 | 207 | 240 | 407 | 163 |
| தெனியாய | 30662 | 18819 | 290 | 316 | 465 | 213 |
| அக்குரஸ்ஸ | 32632 | 18165 | 211 | 175 | 327 | 145 |
| தெவிநுவர | 30817 | 14824 | 197 | 185 | 185 | 169 |
| மாத்தறை | 32503 | 15511 | 123 | 205 | 152 | 138 |
| வெலிகம | 34583 | 16707 | 172 | 163 | 201 | 145 |

## மாவட்டம் கொழும்பு

| | சந்திரிகா | சிறிமா | நிஹால | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| கடுவல | 51876 | 23475 | 205 | 599 | 241 | 521 |
| மகரகம | 47818 | 19514 | 153 | 638 | 158 | 240 |
| கொலன்னாவ | 40296 | 21313 | 156 | 330 | 202 | 201 |
| கோட்டை | 31646 | 16331 | 97 | 521 | 118 | 232 |
| கொழும்பு வடக்கு | 26250 | 15924 | 75 | 118 | 138 | 103 |
| கொழும்புமத்தி | 56219 | 33824 | 149 | 245 | 271 | 291 |
| மொறட்டுவ | 45403 | 24493 | 118 | 280 | 127 | 234 |
| கஸ்பாா | 54327 | 22130 | 179 | 464 | 210 | 268 |
| இரத்மலானை | 28666 | 12275 | 71 | 273 | 273 | 152 |
| ஹோமகம | 45072 | 22369 | 171 | 444 | 279 | 284 |
| தெகிவளை | 23977 | 12783 | 78 | 326 | 111 | 195 |
| கொழும்பு மேற்கு | 14329 | 8557 | 19 | 179 | 68 | 180 |
| அவிசாவளை | 31132 | 23126 | 163 | 887 | 290 | 230 |
| கொழும்பு | 22887 | 12806 | 72 | 373 | 117 | 182 |
| பொரள்ளை | 20837 | 13162 | 57 | 236 | 236 | 124 |

## மாவட்டம் வன்னி

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| மன்னார் | 14607 | 981 | 35 | 24 | 490 | 12 |
| வவுனியா | 16861 | 3026 | 78 | 68 | 499 | 63 |
| முல்லைத்திவு | 1401 | 330 | 4 | 3 | 13 | 11 |

## மாவட்டம் அம்பாறை

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| கல்முனை | 31511 | 4092 | 78 | 58 | 701 | 70 |
| சம்மாந்துறை | 30890 | 6056 | 79 | 50 | 918 | 89 |
| அம்பாறை | 44423 | 34832 | 246 | 236 | 640 | 231 |
| பொத்துவில் | 56780 | 11774 | 147 | 114 | 1407 | 88 |

## மாவட்டம் அம்பாந்தோட்டை

| | சந்திரிகா | சிறிமா | நிகால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| திஸ்ஸமகாராமய | 42523 | 23102 | 478 | 417 | 390 | 197 |
| தங்காலை | 33442 | 18680 | 462 | 332 | 319 | 170 |
| தெகியத்தை | 26335 | 16150 | 285 | 294 | 273 | 165 |
| முல்கிரிய | 26535 | 17983 | 389 | 409 | 419 | 194 |

## மாவட்டம் மட்டக்களப்பு

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| பட்டிருப்பு | 90484 | 621 | 107 | 102 | 1611 | 59 |
| கல்குடா | 41821 | 39330 | 183 | 99 | 1731 | 77 |
| மட்டக்களப்பு | 59814 | 9812 | 194 | 147 | 1572 | 239 |

## மாவட்டம் திருகோணமலை

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை | 28900 | 3925 | 85 | 112 | 697 | 51 |
| சேருவில | 20621 | 11726 | 111 | 85 | 415 | 60 |
| மூதூர் | 25721 | 11209 | 120 | 74 | 946 | 82 |

## மாவட்டம் இரத்தினபுரி

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| நிவித்திகல | 31980 | 22172 | 152 | 202 | 531 | 141 |
| இரத்தினபுரி | 25858 | 141 | 225 | 435 | 435 | 162 |
| எகலியகொட | 32647 | 20589 | 104 | 166 | 366 | 125 |
| பெல்மதுளை | 24076 | 19994 | 118 | 172 | 405 | 138 |
| லொங்கொடை | 32501 | 23943 | 195 | 353 | 154 | 118 |
| பக்குவான | 27997 | 25338 | 154 | 253 | 453 | 189 |
| ரல்கன | 19993 | 14434 | 82 | 93 | 234 | 87 |
| காலன்ன | 44641 | 22425 | 312 | 465 | 666 | 222 |

## மாவட்டம் அனுராதபுரம்

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| மதவாச்சி | 25938 | 13185 | 182 | 126 | 401 | 106 |
| அனுராதபுரம் கிழக்கு | 27421 | 15490 | 134 | 220 | 310 | 102 |
| கொரப்பவொத்தான | 26000 | 13287 | 136 | 80 | 297 | 86 |
| அனுராதபுரம் மேற்கு | 27,142 | 18 892 | 141 | 141 | 365 | 113 |
| கலாவேவ | 42661 | 17331 | 258 | 191 | 547 | 112 |
| மிகிந்தலை | 19935 | 10541 | 97 | 86 | 267 | 66 |
| கெக்கிராவ | 23583 | 14517 | 95 | 110 | 324 | 75 |

## மாவட்டம் நுவரேலிய

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| வலப்பன | 26020 | 20955 | 178 | 226 | 509 | 190 |
| நுவரெலியா | 94262 | 53949 | 618 | 775 | 4897 | 590 |
| கொத்மலை | 22034 | 19708 | 142 | 137 | 555 | 140 |
| ஹங்குராங்கொட | 22917 | 19670 | 96 | 162 | 350 | 153 |

## மாவட்டம் யாழ்ப்பாணம்

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| உடுப்பிட்டி | 24 | 2 | - | - | - | - |
| கோப்பாய் | 11 | 1 | 1 | - | - | - |
| சாவகச்சேரி | 63 | 6 | - | - | 1 | - |
| ஊர்காவற்றுறை | 14761 | 83 | 17 | 27 | 291 | 14 |
| வட்டுக்கோட்டை | 539 | 6 | 2 | 6 | 31 | - |
| யாழ்ப்பாணம் | 1143 | 108 | 4 | - | 15 | - |
| பருத்தித்துறை | 8 | - | - | - | - | - |
| மானிப்பாய் | 18 | - | - | - | - | - |
| கிளிநொச்சி | 174 | 9 | 2 | 1 | - | - |
| ஊர்காவற்றுறை | 24 | 2 | - | - | - | - |
| காங்கேசன்துறை | 116 | 6 | - | - | 3 | - |

## மாவட்டம் கேகால

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| டெடிகம | 28939 | 22989 | 134 | 159 | 329 | 133 |
| கேகாலை | 24126 | 14150 | 115 | 140 | 197 | 187 |
| றம்புக்கனை | 21224 | 13899 | 110 | 144 | 259 | 84 |
| மாவனல்லை | 25400 | 19367 | 101 | 209 | 350 | 143 |
| அரநாயக்க | 17156 | 13854 | 107 | 113 | 224 | 78 |
| யட்டியாந்தோட்டை | 21930 | 18200 | 110 | 180 | 409 | 123 |
| ருவான்வெல | 23340 | 18038 | 119 | 137 | 298 | 131 |
| தெரணியகல | 18793 | 18179 | 94 | 131 | 375 | 128 |
| கல்கமுவ | 22972 | 16086 | 104 | 132 | 307 | 98 |

## மாவட்டம் கம்பஹா

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| சட்டான | 42916 | 24637 | 128 | 184 | 251 | 187 |
| திவுலப்பிட்டிய | 35220 | 23749 | 115 | 169 | 235 | 149 |
| மினுவாங்கொட | 42041 | 22839 | 121 | 269 | 252 | 233 |
| மகர | 46494 | 21935 | 188 | 311 | 251 | 235 |
| தொம்பே | 39151 | 19920 | 116 | 228 | 283 | 152 |
| களனி | 35601 | 18525 | 107 | 344 | 151 | 187 |
| பியகம | 36459 | 19678 | 127 | 340 | 201 | 245 |
| ஜா - எல | 44166 | 24208 | 105 | 266 | 152 | 236 |
| கம்பகா | 51191 | 20094 | 147 | 403 | 15 | 246 |
| அத்தனகல | 51923 | 17437 | 175 | 374 | 396 | 206 |
| நீர்கொழும்பு | 31648 | 22132 | 86 | 133 | 184 | 172 |
| வத்தளை | 37373 | 23671 | 99 | 183 | 180 | 214 |

## மாவட்டம் பதுளை

| | சந்திரிகா | சிறிமா | நிஹால் | ஹரிச்சந்திர | ஹட்சன் | ரணசிங்க |
|---|---|---|---|---|---|---|
| பசறை | 19303 | 13793 | 174 | 176 | 556 | 167 |
| மகியங்கனை | 18218 | 24842 | 203 | 213 | 466 | 213 |
| வியலுவ | 15304 | 11227 | 172 | 145 | 456 | 183 |
| பதுளை | 17416 | 10210 | 76 | 182 | 255 | 104 |
| ஹாலி - எல | 20090 | 14430 | 146 | 212 | 491 | 153 |
| ஊவாபரணகம | 20307 | 16331 | 141 | 134 | 335 | 129 |
| வெலிமடை | 22177 | 17280 | 121 | 164 | 284 | 126 |
| பண்டாரவளை | 23648 | 15072 | 161 | 236 | 464 | 152 |
| ஹப்புத்தளை | 20108 | 13371 | 140 | 221 | 551 | 140 |

(தொடர்ச்சி 2ஆம் பக்கம் பார்க்க)

### பிறந்த இடத்தில் சிறிமாவிற்கு அதிக வாக்கு

சிறிமா திசாநாயக்கா பிறந்த இடமான மகியங்கனை தேர்தல் தொகுதியில் சிறிமா திசநாயக்கவிற்கு அதிகப்படியான வாக்குகள் கிடைத்துள்ளன. இத்தொகுதியில் இவருக்கு 24842 வாக்குகளும், சந்திரிகா குமாரதுங்காவிற்கு 18218 வாக்குகளும் கிடைத்துள்ளன.

### வெடிகொளுத்தி ஆரவாரம்

(கொழும்பு)

ஊரடங்கு உத்தரவையும் மீறி பொதுஜன ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் ஜனாதிபதி தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க வெற்றி பெற்றதைத் தொடர்ந்து வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. பொலிசார் அதனை தடுக்க முனையவில்லை எனவும் தெரியவருகின்றது.

### கலப்பதிக்கு கணிசமானவாக்கு

முற்போக்கு முன்னணியைச் சேர்ந்த நிஹால் கலப்பதி சில தேர்தல் தொகுதியில் கணிசமான அளவு வாக்குகளை பெற்றுள்ளார்.

இவர் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்திருந்தார். சந்திரிகா குமாரதுங்கா தான் வெற்றி பெற்றால் ஜனாதிபதி முறையை ஒழிப்பேன் என அறிவித்திருந்ததைத் தொடர்ந்தே இவர் போட்டியிலிருந்து விலகியிருந்தார்.

### மட்டக்களப்பில் அதிகவிதம்

(கொழும்பு)

இன்று வெளியான ஜனாதிபதி தேர்தல் முடிவுகளில், அதிகூடிய வாக்கு விதத்தில் பிரதமர் சந்திரிகா குமாரதுங்க வெற்றிபெற்ற இடமாக மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம் தெரிவாகியுள்ளது.

இங்கு 83 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகள் பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவுக்கு ஆதரவாக கிடைத்துள்ளது. திருகோணமலையில் 71 சதவீத ஆதரவு வாக்குகளும் அவருக்கு கிடைத்துள்ளது. இதேவேளை மட்டக்களப்பில் எட்டுச் சதவீதமான வாக்குகளே ஐ.தே.கவுக்குகிடைத்துள்ளதுகுறிப்பிடத்தக்கது.

### காமினியின் தொகுதியிலும் தோல்வி

காமினி திசாநாயக்காவின் முன்னைய பாராளுமன்ற பிரதிநிதித்துவ தொகுதியான நுவரெலியாவிலும், அவர் கடைசியாக வெற்றிபெற்ற கண்டி தேர்தல் மாவட்டத்திலும் ஐக்கிய தேசிய கட்சி படுதோல்வியை சந்தித்துள்ளது.

கடந்த காலங்களில் பல தேர்தல்களிலும் நுவரெலியாவில் ஐக்கிய தேசியக் கட்சி முன்னணி வகித்து வந்தது குறிப்பிடத்தக்கது.

### சந்திரிகா சந்திப்பு

(கொழும்பு)

தேர்தல் ஆணையாளருடனும் அமைச்சர்களுடனும் சந்திரிகாகுமாரதுங்க நேற்றுப் பகல் தேர்தல் ஆணையாளர் அலுவலகத்தில் கலந்துரையாடலை நடத்தினார்.

### ராஜதந்திரிகள் சந்திப்பு

(கொழும்பு)

வெளிநாட்டுராஜதந்திரிகள் பத்திரிகையாளர் சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கவை அவரது வெற்றியைத் தொடர்ந்து நேற்றுப் பகல் நேரில் சென்று வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளனர்.

### ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

நேற்று பிற்பகல் 2மணிக்கு நாடு முழுவதும் ஊரடங்கு சட்டம் அமுல் செய்யப்பட்டுள்ளது. இன்று காலை ஊரடங்கு நீக்கப்படுமாயினும் ஊரடங்கு நீடிப்பது குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

## ஓராண்டு நினைவஞ்சலி



வீரவேங்கை மகிநதன
தம்பித்துரை அன்பழகன் - கமல்

மண்ணில் 1976. 12. 05
விண்ணில் 11. 11. 1993

தாய் மானம் காத்திட பாசத்தை துறந்தாய்
தாய் மண்ணை மீட்டிடவே புலிக்குட்டி ஆனாய்
தாய் மண்ணை நேசித்தாய் பூநகரியில் மாவீரன்ஆனாய்
மறைகின்ற சூரியன் இரத்தம் சிந்துவதால் தான்
மறுநாளும் வாழ்கின்றது - மகனே
நீ மறைந்து ஓராண்டு சென்றாலும்
சூரியன் போல் ஒவ்வொரு நாளும் எம் இதயத்தில்
ஒளி வீசுகின்றாய்

11 - 11 - 94 இன்று இவரது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் உற்றார் உறவினர்களை அழைக்கின்றோம்.

16, எழிலூர், - குடும்பத்தினர்.
கொழும்புத்துறை (10033)

## நீங்காத நினைவலைக்குள் நிறைகின்ற முதல் ஆண்டு



கப்டன் செந்தமிழரசு - சிவராசா
(தர்மலிங்கம் சுரேஸ்காந்தன்)
குச்சவெளி, திருகோணமலை

குலவிளக்காய் மலர்ந்தது 30-01-1974
குன்றின் விளக்காய் ஒளிர்ந்தது 11-11-1993

தங்கத் தமிழீழத் தேசத்தலைநகர்
தன்னிற் பிறந்தவரே - ஒளி
பொங்கு விழியுடன் உள்ள நிறைவுடன்
ஓடி உழைத்தீரே
சிட்டுக்கள் போலவே பாடித்திரிந்திடும்
சிறிளம் பருவத்திலே - எதிரி
கொட்டிடும் குண்டுகள் மத்தியில் நித்தமும்
குலையாது நின்றீரே
உம்மை நினைத்திங்கு உங்கள் உறவுகள்
உள்ளம் கலங்குகின்றோம் - மலர்
தம்மைப் படைத்துங்கள் தாளைப்
பணிகின்றோம்
தாவி வருவீரோ

பூநகரியில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட அனைவரையும் அஞ்சலிப்பதுடன் 11-11-94 இன்று எமது வீட்டில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து சிறப்பிக்குமாறு போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

63, சிலன்நகர், அன்பின்,
நாவற்குழி- [100207[ - குடும்பத்தினர்

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாய் மடியில் 29-10-1977
தமிழ்த்தாய் மடியில் 22-11-1993

வீரவேங்கை நிருபன்
(அருளானந்தம் அரவிந்தன்)
திதி : 11-11 1994

மண்மீட்க மழலையிலே மானவழி சென்றாயே
கண்ணுமிழும் கண்ணோடு காத்தங்கு நின்றாயே
மின்போன்று சமர்துளியில் சரித்திரமாய் போனாயே
பொன்னுடம்பு பாரில்விழ எம்மனதில் சோகம் எழ
விண் சென்றாயே மாவீரா அரவிந்தா

துயரினுள் வாடும்
- குடும்பத்தினர்

சிறுப்பிட்டி மேற்கு,
நீர்வேலி.
(10034)

## 1-ம் ஆண்டு நினைவுகள்



மேஜர் வித்தியா
(தபோஜினி பாலசுப்பிரமணியம்)
பிறப்பு; 1972-06-04 வீரச்சாவு: 1993-11-11

''புதுமைப் பெண்ணாய் புலிப்படை அணியில்
போர்க்களம் சென்று ஆர்த்தனை வித்தியா
நீ துயில் இல்லம் எங்கள் நெஞ்சில்
நிறுத்தும் நினைவுகள் ஆயிரம் ஆயிரம்''

இவருடன் பூநகரியில் ஒப்பறேசன் தவளை நடவடிக்கையின்போது வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களுக்கும் எமது இதய அஞ்சலிகள்

- குடும்பத்தினர்

இருபாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். [10016]

## புலிகளின் குரல்
### நிகழ்ச்சி நிரல்

1994. 11. 11
வெள்ளி இரவு

08. 01 - ஒப்பரேஷன் தவளைத் தாக்குதலில் 1ம் ஆண்டு நினைவாக சிறப்பு நிகழ்ச்சி - நாவண்ணன் எழுதிய 'எங்கள் கடலில் எங்கள் படகில்'
08. 25 - கணப்பொழுது - சி. கண்ணம்மா எழுதிய ''கப்டன் முரளி''
08 30 - செய்திகள்
08. 40 - அரசியல் அரங்கம்
08.50 - வாத்திய கானங்கள்
09 00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்;

1994. 11. 12
சனி காலை

07. 02 - மாவீரவணக்கம்
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - நீங்கள் கேட்டவை
08. 00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்

## ஆட்லறி தாக்குதல்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி சிறிலங்கா இராணுவ முகாமில் இருந்து நேற்று முன்தினம் மாலை 5 00 முதல் ஒரு மணித்தியாலம் வரைகும் ஆட்லறிஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

ஆட்லறி ஷெல்கள் வத்தராயன் தென்னம் தோப்புகளில் விழுந்து வெடித்தன. இதனையடுத்துபல தென்னை மரங்கள் சேதமடைந்தன,

(யோ)

## சமய தீட்சை

(கொழும்புத்துறை)

இணுவில் ஸ்ரீ கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபை 'சைவப்பணி மனை' யில் இன்று 11ஆம் திகதி ஐப்பசிக் கடைசி வெள்ளிக்கிழமை காலை8 00 மணிக்கு இலவசமாக சமய தீட்சை நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் இலவசமாக சமயதீட்சை பெற விரும்புவர்கள் சபையினருடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு சபையின் தலைவர் திரு நா. கிருபாகரன் அறிவித்துள்ளார்

(24)

## ஓராண்டு நினைவில்...



லெப்டினன்ட் கேணல்
சூட் / அருணன்
(நவரட்ணம் விக்னராஜன்)


பிறப்பு: 31. 05. 67
வீரச்சாவு. 11. 11. 93

ஓ........ வீரனே சூட்........
தரிசு நிலமதனை விளை நிலமாக்கி
விடுதலை விதை நாட்டும் தேசமதின்
வீரத்தின் வித்தான வீரர்கள் வரிசையில்
இணைந்து கொண்ட உன் பணி தொடர்வோம்

11-11-94 இன்று 12 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு போராளிகள், நண்பர்கள், உற்றார், உறவினர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

ஆடியபாதம் வீதி,
மருத்துவ பீடம் முன்பாக குடும்பத்தினர்.
திருநெல்வேலி. (10041)

## 1.ம் ஆண்டு நினைவஞ்சலி



கப்டன் பழனிவேல் (கண்ணன்)
(சங்கரப்பிள்ளை பஞ்சேந்திரன்)
(வேலணை வடக்கு, வேலணை)

வீரசுதந்திரம் வேண்டு மென்ற
வீருடன் விடுதலைப் புலியானாய்
போரினில் எதிரியின் படையழிக்க
பூநகரிக் களம் நீ குதித்தாய்
நேரினில் பொருதிய சமரதனில்
நினதுயிர் தமிழ்த்தாய் தனுக்கீந்தாய்
பாரினில் மக்கள் போற்றுகின்ற
பெருயர் சரித்திரப் புகழ்படைத்தாய்-எனினும்
ஆறிடுமோ எம் துயர்நிலைதான்
மாறிடுமோ உன் நினைவதுதான்;

பூநகரி கூட்டுத்தளம் மீதான தாக்குதலில் இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களுக்கும் எமது ஓராண்டு நினைவஞ்சலிகள்.
11-11-94 இன்று இந்நிகழ்விற்கு சகபோராளிகள் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

முகவரி:
700,நாவாந்துறை வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.
(10046)

உனது பிரிவால் வாடும்
அப்பா, அம்மா, சகோதர
சகோதரிகள் உறவினர்
நண்பர்கள்

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாவீது
தேவசகாயம்பிள்ளை
(வெற்றிலைக்கேணி)

பிறப்பு 16.12.1904
இறப்பு 29.11.1993

சீவியத்தில் இவரை நேசித்தவர்களே!
மரணித்தாலும் மறவாதீர்கள்;
செபம்
அன்பின் இறைவா!
தாவீது தேவசகாயம் என்னும் உமது அடியாரின் இறப்பினை நினைவு கூரும் நாம் அவருக்காக இறைஞ்சி வேண்டுகின்றோம். அவர் தம் வாழ்நாளில் உமக்கு விரோதமாகச் செய்யப்பட்ட பாவங்களைப் பரிவாய் மன்னித்து நித்திய வாழ்வில் அவரை ஒன்றிணைக்க வேண்டுமென்றும் இவரின் பிரிவினால் துயருறும் சுற்றத்தார்களுக்கும் நீர் ஆறுதல் அளிக்க வேண்டுமென்றும் எம் மன்றாட்டினை சமர்ப்பிக்கின்றோம்: ஆமென்,

(10007)



லெப். ரமேஸ்குமார்
(தேவசகாயம்பிள்ளை மரியதாஸ்)
[வெற்றிலைக்கேணி]

மலர்வு 05. 11. 1972
வீரச்சாவு 11. 11.1993

வெற்றிலைக்கேணி தன்னில் வேங்கையாய் நீ எழுந்தாய்
வீரபல சாதனைகள் வீறு கொண்டு
தான் முடித்தாய்
காலன் உன்னைக் கண் வைத்தான்
மா வீரன் என்றும் பெயர் பூண்டாய்
ஓராண்டு சென்றதென்று ஒரு போதும்
அனுமதியோம்
ஏனென்றால் உன் உருவின் ஒளி
அலை எம் கண்முன்னே
ஓயாமல் முன் நின்று எம் மனதை
வாட்டுதையா;

இவருடன் வீரச்சாவை தழுவிக் கொண்ட ஏனைய மாவீரர்களையும் நினைவு கூருகிறோம்.

இவர்களின் பிரிவால் துயருறும்
அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள்

# நெஞ்சில் நீங்காத
# ஓராண்டு நினைவஞ்சலி



பூநகரிப் போரில் புதுக்காவியம் படைத்த புரட்சிப் புயல்

**கப்டன் ஈழமாறன் (தினேஸ்)**

(சுப்பிரமணியம் இந்திரகுமார்)

**தாய்க்கு மகனாய்:** 5. 5. 1973

**மண்ணுக்கு வீரனாய்** 11. 11. 1993

பூநகரியில் புதுக்காவியம் படைத்து புவியில் நீ சாய்ந்து ஆண்டொன்று ஆகின்றது
வீரம் சுமந்த நெஞ்சுடனே - பல போர்க்களம் புகுந்தவனே
உன் நினைவை எம் நெஞ்சங்களில்
ஏற்றி வைத்து கண்ணீர் அஞ்சலி சொரிகின்றோம்.
இந் நாளில் வீரச்சாவு அடைந்த அனைத்துப் போராளிகளுக்கும் எமது அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

சனிக்கிழமை 12 11. 94 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகல போராளிகளையும் அன்புடன் அழைக்கிறோம்.

விபுலானந்தர் வீதி,
மாதகல்.

தற் போதைய முகவரி:
இந்துக் கல்லூரி அருகாமை
சங்கத்தானை சாவகச்சேரி.

சுப்பிரமணியம்
(குடும்பத்தினர்)

(10035)

## டாக்டர் சிவகுமார் கொழும்பிற்கு இடமாற்றம்

யாழ் போதனா மருத்துவ மனையில் பொது மருத்துவ சிகிச்சைப்பிரிவில் நிபுணராக கடமையாற்றிய வைத்திய கலாநிதி சிவகுமார் கொழும்பிற்கு மாற்றம் பெற்று சென்றுள்ளார்.

வைத்திய கலாநிதி சிவகுமார் மாதம் ஒரு முறை யாழ் போதனா மருத்துவமனைக்கு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளிப்பார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

## மழை போதாமையால் நெற்பயிர்கள் பாதிப்பு

வலிமேற்குப் பகுதியில் கால போக நெற்பயிர்ச் செய்கைக்கு மழை போதாதுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்படி பிரதேசப் பகுதிகளில் அநேக விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபட்டிருந்தும் இம்முறை அதிக மழையின்மையால் வயல்களில் நெற்பயிரைவிட களைப் புல்லின் பெருக்கம் அதிகரித்து காணப்படுவதாகவும் இதனால் புல்பிடுங்கும் வேலைப்பளு அதிகரித்துள்ளதாகவும், வழமையைவிட பணச்செலவு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

## 1-ம் ஆண்டு நினைவலைகள்



**2-ம் லெப். மாதங்கி**

கார்லின் நிரோஜினி தேவசகாயம்

தாயின் மடியில் 12-04-1970

தாயக மண்ணில் 11.11-1993

எம்மண்ணில் துளிர்விட்ட எங்கள் நிரோ
நம் கண்ணில் ஏன் இன்று கண்ணீரோ
மாதங்கியாய் நீ மிளிர்ந்தாய் தலைவனின் பாசறையில்
மாவீரராய் நீ மறைந்தாய் நாகதேவன் துறையிலே
வித்தைகள் பலபுரிந்தாய் சுடுபடைக்கலன்களாலே
எத்தர்கள் எங்கேயென தேடியே நீ அலைந்தாய்
வரிப்புலியுன் வீரம்கண்டு சிங்களமே கலங்கியோட
நெருப்பலையாய் சிறி நீ எதிரிகளை சுட்டெரித்தாய்
விடியலைக் காண்பதற்கு உன் விழியோ இங்கில்லை
மடியவில்லை உன்னிதயம் எம்மீழ மண்ணை விட்டு
எங்கிருந்தோ இறை வாழ்த்தும் இனிய ஒலி கேட்கிறதே
இங்கிருந்தே அணிதிரளும் உன்பாதச் சுவடுகளில்
வித்தாகிப்போன உயிர் வீணாகிப் போகவில்லை,
சொத்தாகத் தந்து விட்டாய் தமிழீழ மண்ணுக்கே
உனையிழந்து ஆண்டொன்று சென்றிட்டாலும்
நினைவினிலே நீக்கமற நீ நிறைந்து நிற்கின்றாய்
அன்னை எங்கள் தாயகத்தின் அணையாத தீபமே
உன்னை எங்கள் இதயத்தில் சுடராக ஏற்றுவோமே

இவர் நினைவால் வாடும்,

பெற்றோர், சகோதரர்கள் மாமாமார்
சித்திமார், பேரன், பேர்த்திமார்
உறவினர், நண்பர்கள்.

இல, 26/2 புதுவீதி
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

[சி-16673]

## ஓராண்டு நினைவலைகள்



**கப்டன் தேவசுஜீ**

இரத்தினம் சுபத்திரா

(ஜமுனா)

(மாவிட்டபுரம் வீதி, கீரிமலை)

தாயின் மடியில் 03-10 1967

தாயக மண்ணில் 11-11-1993

தமிழீழ வான் வெளியில் தாழப்பறக்குதடி
தார்மீக அரசாங்கம் தாரை வார்த்த போர் விமானம்
யமுனா இங்கில்லையென்று ஜமன் போய்ச் சொல்லி விட்டால்

தேவி தேவசுஜீ தீயாய்ச் சிரிப்பாளே
தாவி அணைத்தனையோ தாய்மண்ணை மடியெனவே
ஓராண்டும் எமை நிறுத்தி எட்டிப் போய் விட்டதடி
அம்மா உனக்கெங்கள் விழிக்கடலை அர்ப்பணித்தோம்!

இவருடன் அன்றைய தினத்தில் வித்தாகிய அனைத்து மாவீரர்களுக்கும் எமது அஞ்சலிகள்

11.11.1994 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திற்கு சக போராளிகள் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

சிறிமகால்
டாக்டர் சுப்பிரமணியம் வீதி
சுன்னாகம்

நீங்காத நினைவுடன்,
குடும்பத்தினர்

(10039)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



**கப்டன் பூமகள் விஜயா**

(செல்லையா உதயராணி)

(கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவியும்,
வெளிவாரி பட்டப்படிப்பு கல்லூரி மாணவியும்)

தமிழீழ அரும்பாய் 17-01-1966

தமிழ் மக்கள் விழுதாய் 11-11-1993

மேற்கு வான் சிவக்கு முன்பே - உதயா
உன் அஸ்தமனமா.........
கண்ட கனவுகள் ஆறுமுன்
காலனும் உறக்கம் கலைந்ததேன்?
புயலின் புத்திரியாய் - பூநகரியில்
புதுமை விதைத்தாயே - பூமகளே
மருத்துவ போராளியாய் விஜயா.

விழுப்புண் ஏற்றிடும் சேனைகட்கு - நீ
உயிர் நாடியாய் திகழ்ந்து
மலரும் தமிழீழம் மகத்தான மேன்மை பெற,
நின் கனவு நனவு பெற,
நிழலாக நாமிருந்து நிச்சயமாய் செயற்படுவோம்
அமைதி கொள் பூமகளே.

இத்தினத்தில் எமது மகளுடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கூருகின்றோம்.


36/17, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

- குடும்பத்தினர்.

(9947)

# கண்ணீர் மழையில்

ஓராண்டு — 6-ம் மாதம்



**லெப். மெய்யப்பன்**

யோகராசா சுரேஸ்குமார்

11 - 11 - 1993

< மறைவு >



**யோகராசா புவனேஸ்வரி**

11 - 05 - 1994

உங்களை இழந்த வேதனை
யார் சொல்லியும் ஆறாது
யாருக்கும் சொல்லித் தீராது.

உங்கள் நினைவில்,
பெரியப்பா, பெரியன்ரி,
மாமாமார், சித்தி, அத்தைமார்,
சகோதரர்கள்.

''முருகநிழல்''
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(10026)

# நினைவு கூருகின்றோம்...

## 11-11-1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் பருத்தித்துறைப் பகுதியில் சுற்றிவளைக்க முயன்ற சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய,

**2-ம் லெப். அப்துல்லா** (இ. கிருஷ்ணானந்தன் - திருமலை)

**2-ம் லெப். பவான்** (விக்ரர் பஞ்சாட்சரநாதன் - கொத்திய காடு, தொண்டமானாறு - யாழ்)

**சிவன்** (குட்டித்தம்பி சிவகுமார் - சின்னக்கடற்கரை, தொண்டமானாறு - யாழ்)

பருத்தித்துறையில் நிகழ்ந்த நேரடிச் சமரினை தொலைக்காட்சிக்காகப் படம் பிடிக்கும் போது உலங்குவானூர்தி தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**பட்டேல்** (தில்லையம்பலம் ரகுபதி - பெரியபுலம், பொலிகண்டி - வல்வெட்டித்துறை)

1987-ம் ஆண்டு யாழ் - கோண்டாவில் பகுதியில் இந்தியப் படையினர் கைது செய்யும் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**குட்டி** (துரைசாமி கிருபாகரமூர்த்தி - குமரக்கோட்டம், கோண்டாவில் - யாழ்)

யாழ் - சுதுமலைப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். சுபாஸ்** (சண்முகம் வனந்தரன் - பொன்னாலை தெற்கு, யாழ்)

1988-ம் ஆண்டு வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**விஜய்** (யோகநாதன் ஞானசம்பந்தன் -இரத்தினபுரம்-கிளிநொச்சி)

யாழ் - கஸ்தூரியார் வீதியில் தேசவிரோத சக்திகள் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சரத்பாபு** (நாகராஜேஸ்வரன் சயந்தசிறி - பாண்டியன் தாழ்வு - யாழ்)

மன்னாரில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான, உயர்வகுப்பு மாணவன்

யாழ்ப்பாணத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான, ஆசிரியர் பாலகிருஷ்ணன்

1989-ம் ஆண்டு தென்னமரவடிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**இதயன்** (சினித்தம்பி மகாலிங்கம் - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

1992-ம் ஆண்டு மட்டு - புன்னைக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய,

**தாரகன்/கெனடி** (பாக்கியராஜா நடேஸ்வரன் - ஆரையம்பதி - மட்டு)

1993-ம் ஆண்டு பூநகரி - நாகதேவன்துறை இராணுவ கடற்படை கூட்டுத்தளம் மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது கரும்புலித் தாக்குதலை மேற்கொண்டு வீரச்சாவெய்திய,

**கடற்கரும்புலி மேஜர் கணேஸ்** (நாகநாதி ஜீவநேசன் - புத்தூர் மேற்கு - யாழ்)

பூநகரி - நாகதேவன்துறை இராணுவக் கடற்படை கூட்டுத்தளம் மீது ''ஒப்பரேசன் தவளை'' நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய,

**லெப். கேணல் குணா** (சுந்தரம் விஜயராசா - கல்வயல், சாவகச்சேரி, யாழ்.)

**லெப். கேணல் அருணன் / சூட்** (நவரெட்ணம் விக்னராஜன் - இல: 328, நல்லூர், யாழ்)

**லெப். கேணல் நவநீதன்** (தில்லையம்பலம் திருலோகநாதன்- கனகராயன்குளம், வவுனியா)

**மேஜர் சத்தியேஸ்வரன்** (சிவகுரு மகேந்திரராஜா - கிரான், மட்டக்களப்பு)

**மேஜர் பிரகாஸ்** (பரமநாதன் அருள்நாதன் - வவுனிக்குளம், கிளிநொச்சி)

**மேஜர் ஜெகநாதன்** (பெருமாள் சுந்தரலிங்கம் - சாளம்பைக்குளம், வவுனியா)

**மேஜர் இமையன் / மிரேஸ்** (முத்துராசா கந்தசாமி -ஒட்டிசுட்டான், (நெடுங்கேணி)

**மேஜர் குமரவேல் / குமரேஸ்** (மைக்கல்அன்ரனி-மொறிஸ்லேன், ஈச்சமோட்டை, யாழ்.)

**மேஜர் வித்தியா** (பாலசுப்பிரமணியம் தபோஜினி -இருபாலை வீதி, கோண்டாவில் - யாழ்)

**மேஜர் தயாளினி** (பாலசுந்தரம் சுபா - சேனையூர், மூதூர் - திருமலை)

**மேஜர் நித்தியா/ஜிகிர்தா** (தேவசுந்தரம் விக்கினேஸ்வரி - பொத்துவில் - அம்பாறை)

**மேஜர் இளஞ்செழியன்/அலெக்ஸ்** (செல்லத்துரை பிரதீபராஜன் - தும்பன் வீதி - பருத்தித்துறை)

**மேஜர் இளங்கோவன்** (சுப்பிரமணியம் இராசேந்திரன் - பள்ளிக்குடியிருப்பு - திருமலை)

**மேஜர் மைக்கல்** (செல்வராசா யோகராசா - திருக்கோயில் - அம்பாறை)

**மேஜர் குமணன்** (செல்லையா நவரத்தினம் - செட்டிகுளம் - வவுனியா (குருநாகல்)

கப்டன் கயலவன்/அலெக்ஸ் (ஆனந்தராஜா மிதிலன் - பெரிய கல்லாறு - 3 - மட்டு)

,, லோயிடராஜ் (சங்கமப்போடி உதயராஜா - தம்பிலுவில் 01 - அம்பாறை)

,, சற்சுதன் / லொணி (புவிராஜசிங்கம் வாகீசன் - நொச்சிமுனை - கல்லடி)

,, டவானந்தகுமார் / வின்சன் (பெரியதம்பி யுவராஜா - வெல்லாவெளி - மட்டு)

,, நக்கீரன் (தியாகராஜா சசிகரன் - ஆரையம்பதி - மட்டக்களப்பு)

,, செந்தமிழரசு /சிவராசா (தர்மலிங்கம் சுரேஸ்காந்தன் நாவற்குழி - யாழ் - (திருமலை)

,, பவான் (முனியான் துரையன் இரணைஇலுப்பைக்குளம் வவுனியா)

,, ரங்கநாதன்/ரங்கன் (கனகசபை நகுலானந்தராஜா - கல்மடு - வவுனியா)

,, திலகர் (இராமநாதன் வித்தியானந்தன் - வட்டக்கச்சி கிளிநொச்சி)

,, செந்தூரன் (வேலுப்பிள்ளை உதயகுமார் - குமுழமுனை மணலாறு

,, வாசன் (கதிரவேலு மோகனராசா - ஈச்சங்குளம் வவுனியா)

,, பிறைசூடி/மதீஸ் (சுப்பிரமணியம் சுவேந்திரன் - கோணாவில் - கிளிநொச்சி)

,, விஸ்வநாதன் /கோகிலன் (முருகன் கனகராசா - மான் உருவி - ஒட்டிசுட்டான்)

கப்டன் செல்லையா/லோகேஸ் (கிருஸ்ணசாமி மோகன் - காக்கையன்குளம், இரணைஇலுப்பைக்குளம்)

,, பழனிவேலன் (சங்கரப்பிள்ளை பஞ்சேந்திரன் - ஐந்துசந்தி - யாழ் (வேலணை வடக்கு)

,, தென்னவன் /பிரனா (கனகசிங்கம் தெய்வேந்திரன் - கட்டைபறிச்சான் - திருமலை)

,, செழியன் /நெல்சன் (வடிவேலு சிறிதரன் - ஆரியம் பொற்று, பூநகரி - மன்னார்)

,, இராவணன்/கோணேஸ் (மரியதாஸ் ராயு - டேவிற் றோட், அரியாலை - யாழ்)

,, இளம்பரிதி/விஸ்வநாத் (ஆறுமுகம் ரஜிந்திரன் -ஊரெழு மேற்கு - சுன்னாகம்)

,, கண்ணன் /தினேஸ் (தில்லையம்பலம் தர்மலோகன் - ஆனைப்பந்தி - யாழ்)

,, தூயமணி/நஜிபுல்லா (தளையசிங்கம் உமாசங்கர் -ஐந்து சந்தி - யாழ் (புங்குடுதீவு)

,, ஈழமாறன் /தினேஸ் (சுப்பிரமணியம் இந்திரகுமார் - வரணிறோட் - கொடிகாமம் (மாதகல்)

,, பேரின்பன் /சூரி (இராசு வசந்தமோகன் - உரும்பராய் தெற்கு - யாழ்)

,, கதிரொளி (குலசிங்கம் மகிமதாஸ் - சரஸ்வதி வீதி, அச்சுவேலி வடக்கு - யாழ்)

,, காஞ்சனா (செபமாலை ஜெபநேசன் - அகதிமுகாம், மன்னார் (பெரியநீலாசேனை)

,, குகநாதன் (பொன்னுச்சாமி விசுவநாதன் - தலைமன்னார் பியர்)

,, கவி (யக்கோபு சேகரன் - மடுறோட் - மன்னார் (உயிர்த்தராசன் குளம்)

,, குருவேல் (சற்குருதாசன் செல்வநேசன் - பரியாரிக் கண்டல், முருங்கன் - மன்னார்)

,, யோமான் (சொலமன் யோகேந்திரன் -மடுத்தேவாலயம், மன்னார் - (அநுராதபுரம்)

,, கிளிமொழி/கிறிஸ்ரி (பேனாட் ஜெயராணி - தாழ்வுபாடு, மன்னார் - (இந்தியா)

,, பூமகள்/விஜயா (செல்லையா உதயராணி - பிரம்படி லேன், கொக்குவில் (புங்குடுதீவு)

கலையரசி/மூகேசா (காளியப்பு தங்கேஸ்வரி - (நிலாவெளி - திருகோணமலை)

,, மாலதி (ஐயம்பிள்ளை நந்தினி - சிலாவத்தை - முல்லைத்திவு)

,, துளசிராம் (சின்னமணி தாமரைச்செல்வி - கிளிநொச்சி (பருத்தித்துறை)

,, தேவகி/தேவசுஜி (இரத்தினம் சுபத்திரா - சிறுவிளான், தெல்லிப்பழை - கீரிமலை - யாழ்)

,, சுதர்சனா (பாலசிவராஜா விஜயலட்சுமி - கொக்குத்தொடுவாய் - மணலாறு)

,, நவமணி/கொன்சலா (தனபாலசிங்கம் தனலட்சுமி - நாகர்கோவில் வடக்கு)

,, ஈழவாணி (சுப்பிரமணியம் ஜெயமலர் - இரணை இலுப்பைக்குளம் - வவுனியா)

,, கரிகாலன்/மஞ்சு (தர்மரட்ணம் பிரபாகரன் - அம்பலவாணர் றோட், அத்தியடி - யாழ்)

,, சூரியன்/ரெனோ (விநாயகமூர்த்தி சத்தியகரன் - மறவன் புலோ - சாவகச்சேரி)

,, கற்பகன் (நடனசிகாமணி சீராளன் - இன்பருட்டி, அல்வாய் வடக்கு - பருத்தித்துறை)

,, மயூரன் (தியாகராஜா பாலசபாபதி - அடைக்கலமாதா கோவில் - யாழ் -(பருத்தித்துறை)

,, குட்டித்தம்பி (பால்சாமி வின்சன்ஜெயபால் - காத்தாங்குளம், வட்டக்கண்டல் - மன்னார்)

,, செம்பியன்/நசீர் (தங்கராசா சிறிமுருகன்-மூகத்துவாரம் - மூதூர் - திருமலை)

,, புலவன்/கபூர் (சாமித்தம்பி லோகநாதன் - வெல்லாவெளி - மட்டக்களப்பு)

,, ஈழவாசன் (கதிரமலை ஜெயபாலசிங்கம் - சந்திரோதயம், கைதடிச்சந்தி - யாழ்)

,, கருவேலன் (வெள்ளைச்சாமி ஆறுமுகம் - 9ஆம் கட்டை, உயிலங்குளம் - மன்னார்)

லெப். வித்தியானி (தியாகராஜா சிறிதரன் - பார்வீதி - மட்டக்களப்பு)

,, அசோகன் (பாஸ்கரன் தனபாலன் - திக்கோடை - மட்டக்களப்பு)

,, ஐங்கரன் (கனகசபை புஸ்பராஜா-தம்பிலுவில் அம்பாறை)

,, வேலு (தங்கராசா லக்ஸ்மன் - துறைநீலாவணை - மட்டக்களப்பு)

,, பத்தினியன் (நடராஜா தர்மக்கொடி - அக்கரைப்பற்று - அம்பாறை)

,, நவக்குமார்/கௌசிகன் (கேதாரப்பிள்ளை விஜயகுமார் - கொத்தியாவல - மட்டு)

,, அரசளகன்/அநாளகன் (வீரசிங்கம் மனோலிங்கம் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

,, இராஜேந்திரன் (விநாயகம் மாறன் - வாழைச்சேனை - மட்டக்களப்பு)

,, கார்மேகன் (சுப்பிரமணியம் செல்வராசா - முறக்கொட்டாஞ்சேனை - மட்டு)

,, கமலநேசன் (கணபதிப்பிள்ளை முருகேஸ் - வீரமுனை, சம்மாந்துறை - மட்டு)

,, அதர்மலிங்கன்/காந்தன் (சின்னத்துரை கேதாரலிங்கம் - கதிரவெளி - மட்டு)

,, ரங்கன் (சிவசம்பு டோமசிறி - பழுகாமம் -மட்டக்களப்பு)

,, குணம் (தங்கமணி விமலன் - மாவடிவேம்பு, சித்தாண்டி - மட்டு)

,, பாலகுமார் (கணபதிப்பிள்ளை - புஸ்பராஜா - தேற்றாத்தீவு - மட்டு)

,, சந்திரமாவி (சோமசுந்தரம் கோபாலகிருஸ்ணன் - சின்னவத்தை - மட்டு)

,, ரவிநாதன் (தம்பிமுத்து சித்திரவேல் - காரைதீவு - அம்பாறை)

,, அருள்ச்சந்திரன் (கணபதிப்பிள்ளை சின்னத்துரை - யானைகாட்டியவெளி - மட்டு)

,, மருதவாணன்/சரவணன்(ராமசாமி சுந்தரராஜன் இல. 39/38, சிவன்வீதி - திருமலை)

,, மழவன்/நிசாந்தன் (சாந்தலிங்கம் உதயச்சந்திரன் - திருமலை)

,, அன்புமணி/சுனில் (செல்லையா வால்ஜெயக்கொடி - துணுக்காய், மல்லாவி - கிளிநொச்சி)

,, உதயன் (பரஞ்சோதி பகிரதன் - முள்ளியவளை - முல்லைத்தீவு)

,, ரமேஸ்குமார் (தேவசகாயம்பிள்ளை மரியதாஸ் - நயினாமுனை அகதிமுகாம், செம்பியன்பற்று - வடமராட்சி)

லெப். அழகன் (மருசால் கிறிஸ்ரின் - பெரியகோமரசன் குளம் - வவுனியா)

,, பிரதீபன் (ஐயம்பிள்ளை ஆறுமுகம் - சுதந்திபுரம், உடையார்சட்டு - கிளிநொச்சி)

,, கருணா (குமாரசாமி புவனகுமார் - ஸ்கந்தபுரம் - கிளிநொச்சி)

,, வாசுதேவன் (முத்துலிங்கம் பாலச்சந்திரன் - கூழாங்குளம் - வவுனியா)

,, மூர்த்தி (கனகலிங்கம் தெய்வேந்திரன் - கோயில்குஞ்சுக்குளம், ஓமந்தை - வவுனியா)

,, வேந்தன் (இறேனியாஸ் அமலநாதன் - கண்டிவீதி - கிளிநொச்சி)

,, ஊரான்/நிச்சன் (பாலசுந்தரம் பிரபாகரன் - சாஸ்திரி கூழாங்குளம் - வவுனியா)

,, தயானந்தன் (ஜெயமாலை தோமஸ் - 154-ம் கட்டை, சேச்சடி - கிளிநொச்சி)

,, தணிகைச்செல்வன் (அருளம்பலம் ஜெகநாதன் -தன்னாமுனை - மட்டக்களப்பு)

,, நீலவண்ணன்/தனம் (கந்தையா மகேந்திரன் - இமையாணன், உடுப்பிட்டி - வடமராட்சி)

,, தணிகைவேலன்/கிருபா (கந்தசாமி கிருபாகரன் -மாசியப்பிட்டி, சண்டிலிப்பாய் - யாழ்)

,, அன்பனார் (அல்போன்ஸ் செபநாயகம் - கச்சாய்றோட்- சாவகச்சேரி (நெடுந்தீவு)

,, நிலவேந்தன் (சுப்பிரமணியம் கண்ணன் - புலோலிதெற்கு - புலோலி)

,, அம்பி/றெக்ஸ் (கிருஸ்ணபிள்ளை உதயசீலன் - 5ம் குறிச்சி, ஏறாவூர் - மட்டு)

,, சின்னையா/ பீமன் (பொன்னையா மோகானந்தம் - மண்டூர், பாலமுனை - மட்டு)

,, ஆதித்தன்/இளங்கதிர் (செல்வம் விஜயகுமார் - சிவன் கோயிலடி - சாவகச்சேரி)

,, தானன்/விஜி (முத்துவேல் மூர்த்தி - காளிகோயிலடி ஒழுங்கை - சாவகச்சேரி)

,, அன்பு/கருணா (சுப்பிரமணியம் எனிதகுரு - அம்பன் - குடத்தனை)

,, மாவாணன் (வேலு சங்கர் - பிரதான வீதி, செட்டிக்குளம் - வவுனியா)

,, எழிலரசன்/மோகன் (சின்னத்தம்பி சந்திரசேகரம் - கரணவாய் தெற்கு - கரவெட்டி)

,, செய்யவன்/நேரு (கணபதிப்பிள்ளை தங்கரூபன் - பெரியபளை - பளை)

,, வேந்தன் (சுப்பையா பேரின்பமூர்த்தி - மந்துவில் மேற்கு - கொடிகாமம்)

,, நந்தன் (மணியம் தீசன் - மீசாலை தெற்கு - யாழ்)

,, கலையரசன் (வேலாயுதம்பிள்ளை மாலதன் - புத்தூர்ச்சந்தி - கொடிகாமம்)

,, பழனிவேல் (முத்துலிங்கம் சிறிதரன் - செட்டிப்பாளயம் - மட்டக்களப்பு)

,, பாபு (கணபதி சிறிகாந்தன் - யாக்கரை - கரவெட்டி)

,, இளங்குயில்/ஜமுதா (காத்தலிங்கம் விஜயலட்சுமி - சிறிமுருகன் குடியேற்றத்திட்டம் - வல்வை)

,, மகிழினி (அருள்வாசகம் சகாயபாமா - செபஸ்ரியார் கோவிலடி - மன்னார்)

,, தாமரை (ஜெயவீரசிங்கம் கோகிலா - அந்தோனியார் கோயிலடி, மானிப்பாய் - (தெல்லிப்பழை)

,, மலர்விழி/ஜானு (துரைராஜா வனிதா - படித்த மகளிர் குடியேற்றத்திட்டம் - மிருசுவில் (பருத்தித்துறை)

,, ஆராதனா (காராளசிங்கம் சிஜிதா - அராலி வடக்கு, வட்டுக்கோட்டை - யாழ்)

,, செல்வமலர்/பிருதுவி (இரத்தினசிங்கம் பரணி - மணற்குடியிருப்பு - முல்லைத்தீவு)

,, மணி/மைனா (செல்லையா வசந்தி - புதுக்குடியிருப்பு - முல்லைத்திவு)

,, இளவரசி (செல்லையா கலாநிதி - ஜெயந்திநகர் - கிளிநொச்சி)

,, அமலா/அமரா (சண்முகம் ஜெயா - மடுஅகதிமுகாம்,- மன்னார் (வவுனியா)

,, சௌந்தரி (தம்பிராசா இந்துமதி - குளமங்கால், மல்லாகம் - யாழ் (மட்டக்களப்பு)

,, சாம்பவி (தியாகலிங்கம் சுசரிதா -இல; 18, மாட்டின் வீதி - யாழ்ப்பாணம்)

,, நளாயினி (அந்தோனிப்பிள்ளை கௌசலாதேவி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு

,, பத்மசுகி (சிவபாதம் சிவாஜினி - ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி)

,, சுபானந்தி (தர்மலிங்கம் சுஜாந்தினி - தண்ணீரூற்று, முள்ளியவளை - முல்லைத்தீவு)

,, மலையரசி (சினித்தம்பி குமாரி - தளவாய், பன்குடாவெளி - மட்டு)

,, சூரியா/சிந்துயா (வேலுப்பிள்ளை ஜெயலட்சுமி - நெடுங்கேணி - முல்லைத்தீவு (மாதகல்)

,, தூயவள் செல்லத்துரை தவராணி - வவுனிக்குளம், மல்லாவி - கிளிநொச்சி)

,, அம்பிகை (குமாரசாமி கமலாம்பிகை - தனங்கிளப்பு - சாவகச்சேரி)

,, நாமகள் (இராசர் வினோதினிதேவி - ஆனந்தகானம், ஊரெழு கிழக்கு - யாழ்)

,, மயிலன் (சுந்தரலிங்கம் சிறிரஞ்சன் - வேம்படி - வல்வெட்டித்துறை)

,, பாபு (வினாசித்தம்பி பாஸ்கரராஜா - முள்ளிவாய்க்கால் கிழக்கு - முல்லைத்தீவு)

,, குபேந்திரன்/குயின்ரஸ் (அர்ச்சுனன் கணேஸ்குமார் - தாமரைக்குளம், அடம்பன் - மன்னார்)

,, மெய்யப்பன் (யோகராஜா சுரேஸ்குமார் - சுதுமலை வடக்கு, மானிப்பாய் - யாழ்)

,, சுடரொளி/சிம்மான் (ஜீவரெட்ணம் ஜெகதீபன் - தாளையடி வடக்கு - தாளையடி)

,, பொறுப்பன்/கான்டீபன் (இளையதம்பி பாஸ்கரதாஸ் - ரேமன்தோட்டம் - பளை (திருமலை)

,, மறவன் (அந்தோனிப்பிள்ளை லூட்றென்சன் - நீர்வேலி வடக்கு)

,, நெடுஞ்செழியன் (தாமோதரம்பிள்ளை குலரட்ணம்-சுன்னாகம் தெற்கு)

,, சமுத்திரன் (சந்திரசேகரம்பிள்ளை குமார் - இணுவில் கிழக்கு - யாழ்)

,, கவியரசன் (இராசதுரை குகேந்திரன் -அச்செழு, நீர்வேலி - யாழ்

,, குகதா (அம்பலம் புஸ்பராணி - கதிரிப்பாய், அச்சுவேலி - யாழ்)

,, விமலா (தர்மலிங்கம் விஜயராணி - புக்கப்புலோ, மாதகல் - யாழ்)

,, சுகந்திரா (செல்வராசா அழகானந்தி - புலோலி மேற்கு - பருத்தித்துறை)

,, வரோதயன் பூபாலசிங்கம் சுதாகரன் நற்பிட்டிமுனை - அம்பாறை)